# ஆதி கால வரலாறு

பாடம் 4

## சரியான திசை

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

இலக்கிய அமைப்பு ........ 2

விடுதலையின் ஜலப்பிரளயம் ........ 2

ஆரம்ப உடன்படிக்கை ........ 2

நிலைக்கும் உடன்படிக்கை ........ 3

வெள்ளத்திலிருந்து தப்பித்தல் ........ 4

உலர்ந்த நிலத்திற்குச் செல்லுதல் ........ 5

தெய்வீக நினைவு ........ 5

புதிய ஒழுங்கு ........ 6

நோவாவின் புத்திரர் ........ 6

பாபேலின் தோல்வி ........ 8

உண்மையான அர்த்தம் ........ 9

விடுதலையின் ஜலப்பிரளயம் ........ 9

தொடர்புகள் ........ 10

தாக்கங்கள் ........ 12

நோவாவின் புத்திரர் ........ 12

கானான் ........ 12

முரண்பாடு ........ 14

தாக்கங்கள் ........ 15

பாபேலின் தோல்வி ........ 16

நகரம் ........ 16

வெற்றி ........ 16

தாக்கங்கள் ........ 19

நவீன பயன்பாடு ........ 20

ராஜ்யத்தின் தொடக்கம் ........ 21

உடன்படிக்கை ........ 21

வெற்றி ........ 22

ராஜ்யத்தின் தொடர்ச்சி ........ 23

ஞானஸ்நானம் ........ 23

ஆவிக்குரிய யுத்தம் ........ 25

ராஜ்யத்தின் நிறைவு ........ 26

இறுதிப் பேரழிவு ........ 26

கடைசி யுத்தம் ........ 27

முடிவுரை ........ 29

# முன்னுரை

உக்ரைனில் நான் ஆசிரியராகப் பணியாற்றிய போது, நான் போகவேண்டிய இடத்திற்கான மெட்ரோ ரயிலைப் பிடிப்பதற்கு சில நிமிடங்களே இருந்த ஒரு சம்பவத்தை நினைக்கிறேன். மெட்ரோ நிலையத்திற்கு நான் விரைந்து சென்று, படிக்கட்டுகளில் ஓடி, ரயிலின் கதவுகள் பூட்டப்படும் முன் ரயிலுக்குள் பாய்ந்தேன். அது அந்த முழு நகரத்தைக் கடந்து செல்லும் பயணம் என்பதால், என்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ளும் படி சில நிமிடங்கள் இருக்கையில் சாய்ந்து ஒய்வெடுத்தேன். சிறிது நேரம் சென்ற பின்னரே, நான் தவறான திசையில் செல்லும் ரயிலைப் பிடித்திருக்கிறேன் என்பது எனக்கு உரைத்தது. வழக்கம்போல் அடுத்த மெட்ரோ நிலையம் பல மைல்களுக்கு அப்பால் இருந்ததால், அதை அடைய வெகுநேரமாயிற்று. திரும்பவும் சரியான திசையில் என் பயணத்தைத் தொடரும் வேளையில் நான் மிகவும் தாமதமாகப் போகிறேன் என்பது தெளிவாகத் தெரிந்தது. ”இந்த சூழ்நிலை நான் நினைத்தது போல இல்லாவிட்டாலும், இப்பொழுதாவது சரியான திசையில் செல்கிறேன்” என்று எனக்குள்ளே நான் கூறிக்கொண்டதை நினைவுகூர்கிறேன்.

நம் வாழ்வின் காரியங்கள் பெருவாரியான பகுதிகளில் இப்படித்தான் உள்ளது என்று நினைக்கிறேன். பெரும்பாலான நேரங்களில் அவை கொஞ்சம்கூட அல்லது முற்றிலும் நேர்த்தியில்லாமல் இருக்கின்றன. நாம் செல்லுமிடமெல்லாம் பலவித பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்கொள்கிறோம். இருப்பினும், தவறான திசையில் செல்வதைவிட, சரியான திசையில் செல்வது இன்னும் சிறந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இப்பாடத்திற்கு ”சரியான திசை” என்று பெயரிட்டுள்ளோம். இங்கு நாம் ஆதியாகமம் 6:9-11:9 இல் நோவாவின் நாட்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தேவன் தம் ஜனங்கள் வழி நடக்கும்படி ஏற்படுத்தி வைத்திருந்த திசையைக் கண்டறியப் போகிறோம். ஆதி கால வரலாற்றைக் குறித்த இந்த அதிகாரங்களில் மோசே இஸ்ரவேல் ஜனங்கள் தொடரும்படி ஒரு தெளிவான திசையைக் கொடுத்தார் என்று பார்க்கிறோம். அது அவர்கள் விரும்பியபடி இல்லாவிட்டாலும், பெரும் ஆசீர்வாதத்திற்கு நேராக அவர்கள் கடந்து வரும்படி தேவனால் நியமிக்கப்பட்டதாகும். இதே திசையைத் தொடரும்படி கிறிஸ்தவர்களாகிய நமக்கும் ஆதி வரலாற்றின் இந்த வேதபகுதி மிகவும் முக்கியமானதாகும்.

ஆதியாகமம் 6:9-11:9 பற்றிய நமது ஆய்வு மூன்று பகுதிகளாகப் பிரிகிறது: முதலாவது, இந்த அதிகாரங்களின் இலக்கிய அமைப்பை நாம் ஆராய்வோம்; இரண்டாவதாக, இஸ்ரவேல் மக்களுக்காக மோசே ஏன் இந்தக் காரியத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எழுதினார் என்பதை அறிந்துகொள்வதன் மூலம் அவற்றின் உண்மையான அர்த்தத்தை நாம் ஆராய்வோம்; மூன்றாவதாக, இந்த அதிகாரங்களை நம் வாழ்வில் பயன்படுத்தும் வழிகாட்டுதலுக்காகப் புதிய ஏற்பாட்டைப் பார்ப்போம். இந்த அதிகாரங்களின் இலக்கிய அமைப்பை ஆராய்வதன் மூலம் சரியான திசையைப் பற்றிய நமது ஆய்வைத் தொடங்குவோம்.

# இலக்கிய அமைப்பு

ஆதியாகமம் 6:9–11:9 என்பது ஆதி வரலாற்றின் ஒரு பெரும் பகுதியாகும். இது பல்வேறு வழிகளில் கோடிட்டுக் காட்டப்படலாம். நம்முடைய நோக்கங்களுக்காக, இந்த அதிகாரங்களை இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரித்துள்ளோம். 6:9–9:17 ஐக் கொண்டுள்ள முதல் பிரிவிற்கு, ”விடுதலையின் ஜலப்பிரளயம்” என்று தலைப்பிட்டுள்ளோம். ஆதியாகமத்தின் இந்தப் பகுதியில், நோவா காலத்து ஜலப்பிரளயத்தை மோசே விவரித்தார். இதன் இரண்டாவது பகுதி, ”புதிய ஒழுங்கு” என்ற தலைப்பில் உள்ள ஆதியாகமம் 9:18-11:9 ஆகும். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு நடந்த பல முக்கியமான நிகழ்வுகளை இது விவரித்து, உலகத்தை வகைப்படுத்த நீடிக்கும் முறைகளை அமைக்கிறது. இந்த அதிகாரங்களின் இலக்கிய வடிவத்தை நன்கு புரிந்துகொள்ள, நாம் இந்த இரண்டு முக்கிய பெரும்பகுதிகளையும் பார்ப்போம். நோவாவின் நாளில் நிகழ்ந்த ஜலப்பிரளயத்தைப் பற்றி மோசே எழுதிய கதையின் அமைப்பை ஆராய்வதன் மூலம் ஆரம்பிக்கலாம்.

## விடுதலையின் ஜலப்பிரளயம்

சமீப ஆண்டுகளில் நோவாவின் ஜலப்பிரளயத்தின் சம்பவம் ஒப்பீட்டளவில் ஒரு தெளிவான இலக்கிய வடிவத்தைக் காட்டுகிறது என்பதைப் பல மொழிபெயர்ப்பாளர்கள் கவனித்துள்ளனர். இந்த முறையைப் பல வழிகளில் விவரிக்கக்கூடும் என்றாலும், இந்த ஆய்வில் இந்த அதிகாரங்கள் எவ்வாறு ஒரு ஒற்றுமையான ஐந்து-படிகளுடைய நிகழ்வை உருவாக்குகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவோம்.

### ஆரம்ப உடன்படிக்கை

இச்சம்பவத்தின் முதற்படி ஆதியாகமம் 6:9-22 இல் தோன்றுகிறது. அதை நாம் நோவாவுடனான ”முதல் தெய்வீக உடன்படிக்கை” என்று அழைப்போம். சம்பவத்தின் இப்பகுதியில், சீர்கெட்டுப்போன உலகில் நோவாவை ஒரு நீதியுள்ள மனிதன் என்று மோசே குறிப்பிட்டார். தேவன் நோவாவிடம் அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏன் மனுகுலத்தை அழிக்கத் திட்டமிட்டார் என்பதை வெளிப்படுத்தினார். இந்த வார்த்தைகளை நாம் ஆதியாகமம் 6:13 இல் வாசிக்கிறோம்:

> அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: "மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது. நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்" (ஆதியாகமம் 6:13).

ஆயினும், இச்சம்பவத்தின் முதற்படி, தேவன் ஒரு மனிதனையும் அவனுடைய வீட்டாரையும், அதாவது நீதிமான் நோவாவை விடுவிப்பதன் மூலம் மீண்டும் தம் கிரியையைத் தொடங்கத் திட்டமிட்டார் என்றும் சொல்கிறது. தம்முடைய இந்த நோக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக, தேவன் நோவாவுடன் முதலில் ஒரு உடன்படிக்கை செய்தார். ஆதியாகமம் 6:17-18 இல், தேவன் இந்த வார்த்தைகளை நோவாவிடம் கூறியதாக நாம் வாசிக்கிறோம்:

> பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம். ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும் - உன்னோடேகூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள் (ஆதியாகமம் 6:17-18).

ஜலப்பிரளயத்தின் ஆரம்பத்தில், வரவிருக்கும் வெள்ளத்திலிருந்து நோவாவையும் அவனுடைய வீட்டாரையும் மீட்பதற்காக தேவன் ஒரு உடன்படிக்கை சத்தியம் செய்தார். இந்த உடன்படிக்கை நோவாவின் மீட்பிற்கு உறுதியளித்து, ஜலப்பிரளயத்திற்குப் பிறகு அவனை புதிய மனுக்குலத்தின் தகப்பனாக ஏற்படுத்தியது.

நோவாவுடனான தேவனின் முதல் உடன்படிக்கையில் கவனம் செலுத்துவதன் மூலம் ஜலப்பிரளய சம்பவம் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கும் வேளையில், முதல் பகுதியான 8:20-9:17 ஐ சமநிலைப்படுத்தும், நோவாவுடனான "நிலைக்கும் தெய்வீக உடன்படிக்கை" எனத் தலைப்பிட்டுள்ள சம்பவத்தின் கடைசிப் பகுதிக்கு நாம் திரும்ப வேண்டும்.

## நிலைக்கும் உடன்படிக்கை

நம் தலைப்பு குறிப்பிடுவது போல, இந்த வேதபகுதியில் தேவன் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு நோவாவிடம் திரும்பி வந்து அவனுடன் மற்றொரு உடன்படிக்கை செய்தார். தேவன் மனுக்குலத்திற்கு உலகத்தில் ஒரு புதிய ஒழுங்கின் வாய்ப்பை வழங்க முடிவு செய்தார். ஆதியாகமம் 8:22 இல் நாம் வாசிப்பதைப் போல:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை (ஆதியாகமம் 8:22).

இந்தப் புதிய அமைப்பின் உறுதியை நிலைநாட்ட, தேவன் ஆதியாகமம் 9:11-15 இல் ஜலப்பிரளய சம்பவத்தின் முடிவில் நோவாவுடன் இரண்டாவது உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

> இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்....நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன் (ஆதியாகமம் 9:11-15).

எனவே நோவாவின் ஜலப்பிரளய சம்பவம் பூமியை மீண்டும் ஒரு வெள்ளம் அழிக்காது என்ற உடன்படிக்கை வாக்குறுதியுடன் முடிவடைவதை நாம் காண்கிறோம். மேலும் தேவன் இந்த வாக்குறுதியை மறக்க மாட்டார் என்பதற்கான உறுதியின் அடையாளமாக மேகங்களில் தமது வானவில்லை வைத்தார். இறுதி உடன்படிக்கையின் இந்த வாக்குறுதி, நோவாவுக்கு ஆதி வரலாற்றில் இருந்த முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அவன் உடன்படிக்கையின் ஒரு மத்தியஸ்தனாக இருந்தான், இது அனைத்து வருங்கால சந்ததியினருக்கும் சேர்த்து அருளப்பட்ட ஒரு உடன்படிக்கையாகும்.

இச்சம்பவத்தின் துவக்க மற்றும் இறுதிப் பகுதிகளை மனதில் கொண்டு, ஜலப்பிரளய சம்பவத்தின் உள் செயல்பாடுகளை ஆராய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இதன் மத்தியபகுதி தேவனின் முதல் உடன்படிக்கையிலிருந்து மூன்று முக்கிய படிகளாக இறுதி உடன்படிக்கையின் புதிய ஒழுங்கிற்கு நகர்கிறது.

## வெள்ளத்திலிருந்து தப்பித்தல்

இச்சம்பவத்தின் இரண்டாவது படி நோவாவின் ”வெள்ளத்திலிருந்து தப்பித்தல்” என்று நாம் பெயரிட்டுள்ள 7:1-16 இல் தோன்றுகிறது. இதன் பொருள் மிகவும் நேரடியானது. நோவா பேழையை உண்டுபண்ணி, அதில் எல்லா வகையான விலங்குகளையும் கொண்டு வந்தான். வெள்ளம் உலகத்தில் பிரவாகிக்கத் தொடங்கியது. ஆனால் நோவா, அவனது வீட்டார் மற்றும் அவன் கூட்டிச்சேர்த்த விலங்குகள் பேழைக்குள் பத்திரமாக அடைக்கப்பட்டன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## உலர்ந்த நிலத்திற்குச் செல்லுதல்

நோவாவின் ஜலப்பிரளய சம்பவத்தின் நான்காவது பகுதி இரண்டாவது படிக்கு ஒரு வியத்தகு எதிர் நிலையை உருவாக்குகிறது. ஆதியாகமம் 8:6-19 இல் உலர்ந்த நிலத்திற்கு நோவா சென்றதை இது விவரிக்கிறது. வெள்ளம் வடியத் தொடங்கிய பிறகு, பேழையை விட்டு வெளியேறும்படி வறண்ட நிலம் தோன்ற வேண்டும் என்று நோவா வாஞ்சித்தான். ஒரு நீண்ட காத்திருப்புக்குப் பிறகு, வறண்ட நிலங்கள் தோன்றியது. முன்பு தேவன் நோவாவைப் பேழைக்குள் செல்லக் கட்டளையிட்டதைப் போல பேழையை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார்.

## தெய்வீக நினைவு

நோவாவின் "தெய்வீக நினைவு" என்று நாம் தலைப்பிட்டுள்ள ஆதியாகமம் 7:17-8:5 என்கிற இந்தச் சம்பவத்தின் மையத்தை அல்லது திருப்புமுனையைப் பார்க்க வேண்டிய நிலையில் இப்போது நாம் இருக்கிறோம். இந்த வசனங்கள் வெள்ளம் பொங்கி எழுவது மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினத்தையும் அழிப்பது பற்றிய விளக்கத்துடன் தொடங்குகிறது. ஆனால் இந்தப் பகுதியின் முடிவில், வெள்ளம் வடியத் தொடங்குகிறது.

இப்போது, இந்தப் பகுதியின் மத்தியில் எளிய ஆனால் ஆழமான அர்த்தமுள்ள ஒரு வாக்கியம் உள்ளது. இது தேவன் ஏன் வெள்ளத்தை மட்டுப்படுத்தத் தொடங்கினார் என்பதைக் குறிக்கிறது. ஆதியாகமம் 8:1 இல் புயலின் நடுவே மோசே இவ்வாறு எழுதினார்:

> தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த சகல காட்டுமிருகங்களையும், சகல நாட்டுமிருகங்களையும் நினைத்தருளினார்; தேவன் பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணினார், அப்பொழுது ஜலம் அமர்ந்தது (ஆதியாகமம் 8:1).

தமது மிகுந்த இரக்கத்தினால், நோவா மற்றும் அவனுடன் இருந்தவர்களுடன் பண்ணின உடன்படிக்கையை தேவன் மறக்கவில்லை. பேழையின் பயணிகளை தேவன் நினைவு கூர்ந்து, அவர்கள் நிமித்தம் பொங்கி வரும் வெள்ளத்திற்கு எதிராக அவர் இடைபட்டார்.

நோவாவின் ஜலப்பிரளயத்தின் இந்தச் சுருக்கம் இச்சம்பவத்தின் முதன்மை விஷயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது. ஜலப்பிரளயத்தைப் பற்றி மோசே விடுதலையின் சம்பவமாக எழுதினார். பூமியின் பொல்லாத ஜனங்கள் மீது நியாயத்தீர்ப்பு வந்தாலும், மோசேயின் முக்கிய நோக்கம் நோவாவின் மூலம் தேவன் மனுக்குலத்தை மிகப்பெரிய ஆசீர்வாத உலகிற்கு கொண்டு வந்தார் என்பதைக் காட்டுவதாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமம் 6:9–11:9 இன் முதல் பகுதியை இப்போது நாம் ஆராய்ந்திருக்கிற வேளையில், ஆதியாகமம் 9:18–11:9 இல் உள்ள இரண்டாவது பெரிய பகுதியான புதிய ஒழுங்கிற்கு நாம் திரும்ப வேண்டும்.

# புதிய ஒழுங்கு

9-11 ஆம் அதிகாரங்களிலுள்ள புதிய ஒழுங்கைப் பற்றிய மோசேயின் குறிப்பு இரண்டு அடிப்படைப் பகுதிகளாகப் பிரிகிறது. ஒருபுறம் ஆதியாகமம் 9:18-10:32 நோவாவின் புத்திரரில் கவனம் செலுத்துகிறது. மறுபுறம், ஆதியாகமம் 11:1-9 பாபேல் நகரத்தின் தோல்வியைப் பற்றியது. இந்த வேதபகுதிகள் முதலில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாததாகத் தோன்றினாலும், உலகின் புதிய ஒழுங்கிற்கான ஒரு வடிவத்தை உருவாக்க உண்மையில் அவை ஒன்றிணைந்து செயல்படுவதை நாம் பார்ப்போம். அவைகள் அந்தக் காலகட்டத்திலிருந்து உலக வரலாற்றின் முக்கிய அம்சங்களை முன்வைக்கின்றன. முதலில் நோவாவின் புத்திரரின் குறிப்பு மற்றும் புதிதாக ஒழுங்குபடுத்தப்பட்ட உலகின் இந்த தோற்றத்திற்கு அது செய்யும் பங்களிப்பைப் பார்ப்போம்.

## நோவாவின் புத்திரர்

ஆதியாகமத்தின் 9-10 அதிகாரங்களில் நோவாவின் புத்திரர் குறித்த மோசேயின் பதிவு ஒரு தலைப்பு மற்றும் இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. 9:18-19 இல் ஆதியாகமத்தின் இந்தப் பகுதி அடிப்படையில் நோவாவின் மூன்று குமாரரின் மீது கவனம் செலுத்துவதையும், அவர்கள் பூமியில் எவ்வாறு பரம்பியிருந்தார்கள் என்பதையும் குறிப்பிடும் ஒரு தலைப்பைக் காண்கிறோம்.

இந்த தலைப்பிற்கு ஏற்ப, நோவாவின் புத்திரர் பற்றிய மோசேயின் பதிவு இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிகிறது. முதலில் 9:20-29 இல் உள்ள சம்பவம் நோவாவின் புத்திரரிடையே காணப்படும் வேறுபாடுகளை முன்வைக்கிறது. இரண்டாவதாக, 10:1-32 நோவாவின் குமாரர் மற்றும் அவர்களின் சந்ததியினரின் பரவலை விவரிக்கிறது. இந்தப் பிரிவுகளைத் தனித்தனியாகப் பார்ப்பது உதவியாக இருக்கும்.

அதிகாரம் 9:20-29 என்பது ஆதியாகமத்தில் நன்கு அறியப்பட்ட பகுதி. இது காமின் மகன் கானானின் சாபத்தைப் பற்றிப் பேசுகிறது. ஆதியாகமம் 9:24-27 இல் மோசே எழுதியதைக் கவனியுங்கள்:

> நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது, தன் இளையகுமாரன் தனக்குச் செய்ததை அறிந்து: ”கானான் சபிக்கப்பட்டவன்” என்றான் … சேமுடைய தேவனாகிய

> கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக … யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார் என்றான் (ஆதியாகமம் 9:24-27).

எளிமையாகச் சொன்னால், இச்சம்பவம் நோவாவின் சந்ததியினரிடையே பெரும் வேறுபாட்டிற்கு வழிவகுத்த நிகழ்வுகளை அறிவிக்கிறது. காமின் மகன் கானானை நோவா சபித்தான். கானான் தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான். இருப்பினும், நோவா தனது மற்ற குமாரர்களான சேம் மற்றும் யாப்பேத் தன்னை கனத்துடன் நடத்தினபடியால் அவர்களை ஆசீர்வதித்தான்.

ஜலப்பிரளயத்திற்குப் பிறகு புதிய ஒழுங்கைப் பற்றிய தனது விளக்கத்தில் மோசே இச்சம்பவத்தைச் சேர்த்தார். ஏனென்றால் முழு மனித இனமுமே நோவாவின் இந்த மூன்று குமாரரிடமிருந்து வந்தது. இங்கு செய்யப்பட்ட வேறுபாடுகள் வேதாகம வரலாற்றில் இக்காலத்திலிருந்து காணப்படும் மனித உறவுகளின் இயக்கத்திற்கு வழிவகுத்தது.

நோவாவின் குமாரர்களுக்கிடையேயான வேறுபாடுகள் குறித்த இந்தக் கண்ணோட்டம் அதிகாரம் 10 இல் நோவாவின் புத்திரருடைய பரவுதல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நோவாவின் நாட்களுக்குப் பிறகு வந்த தலைமுறைகளைப் பார்த்து, ஆதியாகமம் 10 இல், காம், சேம் மற்றும் யாப்பேத்தின் சந்ததியினர் உலகம் முழுவதும் சென்ற இடங்களின் மாதிரிப் பட்டியலை மோசே கொடுத்தார். ஆதியாகமம் 10 இன் படி, யாப்பேத்தியர்கள் கானானின் வடக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளை ஆக்கிரமித்தனர். ஒரு சில விதிவிலக்குகளுடன், காமியர்கள் வடக்கு ஆப்பிரிக்காவை நோக்கி நகர்ந்தனர். காமின் விஷேசித்த மகன், அதாவது கானான், இஸ்ரவேலின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலமான கானான் நாட்டில் வாழ்ந்தான். சேமின் தலைமுறைகள் அரேபிய தீபகற்பத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்தனர்.

ஆதியாகமம் 10 இன் பதிவு மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் புலம்பெயர்தலுக்கான பொதுவான அமைப்புகளை மட்டுமே வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜலப்பிரளயத்திற்குப் பிறகான புதிய ஒழுங்கில் மனித சம்பாஷணைகளை வகைப்படுத்தும் சில நீண்ட கால அமைப்புகளை விளக்குவதற்கு இந்தப் பொதுவான வடிவங்கள் மோசேக்கு போதுமானதாக இருந்தன.

ஆதியாகமம் 9-10 இல் நோவாவின் புத்திரரைப் பற்றிய மோசேயுடைய கவனத்தின் இலக்கிய அமைப்பை இப்போது நாம் பார்த்திருக்கும் வேளையில், வெள்ளத்திற்குப் பிறகு புதிய ஒழுங்கின் இரண்டாவது பகுதியான 11:1-9 இல் உள்ள பாபேல் நகரத்தின் தோல்வியை நாம் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பாபேலின் தோல்வி

பாபேல் கோபுரத்தின் சம்பவம் ஐந்து வியத்தகு ஒற்றுமையுள்ள படிகளாகப் பிரிகிறது. 1 மற்றும் 2 ஆம் வசனங்களின் முதல் படி சேர்ந்து வாழ்ந்த மனுக்குலத்தின் பெரும்பான்மையுடன் தொடங்குகிறது. ஆனால் இதற்கு நேர்மாறாக, இச்சம்பவம் 8 மற்றும் 9 ஆம் வசனங்களில் முடிவடைகிறது. அங்கு தேவன் மனித பாஷையைக் குழப்பியதால் பூமியில் மனுக்குலத்தைச் சிதறடித்தார் என்பதை அறிகிறோம். ஒரே மொழியுடன் ஒன்றாக இருந்த மனுக்குலம் எப்படி பல மொழிகள் கொண்டதாகச் சிதறடிக்கப்பட்டது? என்ன நடந்தது என்பதை நடுப்பகுதி விளக்குகிறது.

வசனம் 3 மற்றும் 4 ன் இரண்டாவது படி ஜனங்கள் கொண்டிருந்த ஒரு திட்டத்தை அறிக்கையிடுகிறது. அவர்கள் எக்காலத்திலும் புகழ்பெற்றவர்களாகவும் முற்றிலும் வெல்ல முடியாதவர்களாகவும் இருக்கும்படிக்கு வானளாவிய ஒரு பெரிய கோபுரத்துடன் ஒரு நகரத்தை உருவாக்க விரும்பினர். இருப்பினும், 6 மற்றும் 7 ஆம் வசனங்களில் உள்ள இந்த சம்பவத்தின் நான்காவது படி தேவனின் எதிர் திட்டத்தை அறிவிப்பதன் மூலம் இந்த மனித திட்டத்தைச் சமப்படுத்துகிறது. தேவன் மக்களின் மொழியைக் குழப்பி நகரத்தைத் தாக்க தமது பரலோகச் சேனையை அழைத்தார். அதன் மூலம் மக்கள் நகரத்தையும் அதன் கோபுரத்தையும் கட்டுவதை நிறுத்தினார்.

இந்தச் சம்பவத்தின் திருப்புமுனை வசனம் 5 இல் தோன்றுகிறது, அங்கு தேவன் நகரத்தையும் அதன் கோபுரத்தையும் பார்வையிட்டார். தேவன் நகரத்தையும் அதன் குடிமக்களின் பெருமைக்குரிய திட்டங்களையும் பார்த்தவுடன், அவர் பாபேல் நகரத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்தார்.

எனவே மோசேயின் கூற்றுப்படி, ஜலப்பிரளயத்திற்குப் பிந்தைய வாழ்க்கை நாம் எதிர்பார்த்திருக்கக்கூடிய பரதீசிலிருந்து வெகு தொலைவில் இருந்தது. மாறாக, நோவாவின் குமாரரின் குறிப்பு புதிய ஒழுங்கில் மனுக்குலத்தின் பல்வேறு கோத்திரங்களிடையே சிக்கலான தொடர்புகளை உள்ளடக்கியது என்பதைக் காட்டுகிறது. இது தேவனை அதிகமாக மீறுவதையும், அவரை மீறுபவர்களை இறுதியில் தேவன் தோற்கடிப்பதையும் உள்ளடக்கியது. புதிய ஒழுங்கின் இந்த கட்டமைப்புகள் நமது நவீன காதுகளுக்கு விசித்திரமாகத் தோன்றினாலும், முதலில் மோசே இந்த அதிகாரங்களை எழுதிய இஸ்ரவேலர்களின் அனுபவங்களுக்கு அவைகள் வெளிப்படையாகப் பேசியதை நாம் பார்ப்போம்.

ஆதியாகமம் 6:9–11:9 இன் இலக்கிய அமைப்பை இப்போது நாம் பார்த்திருக்கையில், இரண்டாவது கேள்வியைக் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்: ஜலப்பிரளயம் மற்றும் அதனால் ஏற்பட்ட புதிய ஒழுங்கைப் பற்றி இந்தக் குறிப்பை மோசே ஏன் எழுதினார்? வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேசத்தை நோக்கி அவரைப் பின்தொடரும் இஸ்ரவேலர்களுக்கு அவர் என்ன பாடங்களைக் கற்பித்தார்?

# உண்மையான அர்த்தம்

இஸ்ரவேலுக்கு நோவாவின் ஜலப்பிரளயம் மற்றும் இந்த ஆதி வரலாற்றின் உண்மைகளைத் தெரிவிக்க புதிய ஒழுங்கின் போக்கைப் பற்றி மோசே எழுதினார் என்று உறுதியாக நாம் சொல்லத் தேவையில்லை. ஆயினும்கூட, அவரது பதிவு அவர் மனதில் இருந்த மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் குறிப்பிட்ட கருப்பொருள்களை நோக்கியதாகத்தான் இருந்தது என நாம் நினைக்கும்படி உள்ளது. மோசே கடந்த காலத்தை அறிவிக்க மட்டுமல்லாமல், தனது சொந்த நாட்களில் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தவும் எழுதினார்.

ஆதியாகமம் 6:9–11:9 இன் மூன்று பகுதிகளைப் பார்ப்பதன் மூலம் மோசேயின் நோக்கத்தை நாம் வெளிப்படுத்துவோம்: முதலில், ஜலப்பிரளயத்தின் உண்மையான அர்த்தத்தை நாம் ஆராய்வோம்; பின்னர் நாம் நோவாவின் குமாரர் பற்றிய மோசேயின் பதிவுக்குத் திரும்புவோம்; இறுதியாக, ஆதி வரலாற்றின் கடைசிப் பகுதியான பாபேலின் தோல்வி என்னும் உண்மையான விளைவுகளில் நாம் கவனம் செலுத்துவோம். மோசே தனது காலத்தில் இஸ்ரவேலின் அனுபவத்துடன் நோவாவின் ஜலப்பிரளயத்தைத் தொடர்புபடுத்திய வழிகளைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## விடுதலையின் ஜலப்பிரளயம்

ஜலப்பிரளய சம்பவத்தின் மோசேயின் பயன்பாட்டைக் கண்டறிய, இச்சம்பவத்தின் இரண்டு அம்சங்களைப் பார்ப்போம்: முதலில், ஜலப்பிரளயத்திற்கும் இஸ்ரவேல் மக்களின் யாத்திரைக்கும் இடையில் அவர் ஏற்படுத்திய தொடர்புகள்; இரண்டாவது, இஸ்ரவேலுக்கான இத்தொடர்புகளின் தாக்கங்கள். மோசே தனது சொந்த வாழ்க்கை மற்றும் ஊழியத்தை நெருக்கமாக ஒத்திருக்கும் விதத்தில் நோவாவை சித்தரிப்பதன் மூலம் ஜலப்பிரளயத்திற்கும் அவரது காலத்திற்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தினார். இப்போது, இதை உறுதிப்படுத்த நோவா மற்றும் மோசேயின் வாழ்க்கைகள் பல வழிகளில் வேறுபட்டது. இவ்வேறுபாடுகள் புறக்கணிக்கப்படக் கூடாது. ஆயினும், மோசே தன் இஸ்ரவேல் வாசகர்கள் நோவாவை மோசேயின் முன்னோடி அல்லது முன்னறிவிப்பாகப் பார்க்கும்படி வேண்டுமென்றே சித்தரித்தார் என்பதும் தெளிவாகிறது.

## தொடர்புகள்

நோவாவுக்கும் மோசேக்கும் இடையே குறைந்தது எட்டு குறிப்பிடத்தக்க தொடர்புகளாவது உள்ளன. முதலில், வன்முறை நோக்கத்தில் மோசே தனக்கும் நோவாவுக்கும் இடையே ஒரு தொடர்பை வரைந்தார். உலகம் வன்முறையால் நிரம்பியதால் நோவாவின் ஜலப்பிரளயம் நேரிட்டது என்பதை ஆதியாகமம் 6:13 லிருந்து நீங்கள் நினைவு கூரக்கூடும். யாத்திராகமம் 1-2 தெளிவுபடுத்துவது போல், மோசேயின் அழைப்புக்கு முன்னர் இஸ்ரவேல் மக்கள் மீது எகிப்தியர்கள் அதிக அடக்குமுறையை ஏவினர். இஸ்ரவேல் மக்கள் மீது நடத்தப்பட்ட அடக்குமுறைக்குப் பதிலடியாக எகிப்திலிருந்து மோசேயின் விடுதலை வந்தது. எனவே, நோவா மற்றும் மோசேயின் பணி வன்முறையிலிருந்து விடுவிப்பதாகும்.

இரண்டாவது தொடர்பு மோசே ”பேழை” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் தோன்றுகிறது. ஆதியாகமம் 6-9 முழுவதும் நோவாவின் பேழைக்கான எபிரெய வார்த்தை *டேவா* (תֵּבָה) என்பதாகும். சுவாரஸ்யமாக, மோசே *டேவா* என்ற வார்த்தையைப் பயன்படுத்திய ஒரே இடம் யாத்திராகமம் 2: 3,5 இல் உள்ளது. அங்கு அவர் தனது தாய் அவரை வைத்த கூடையை பேழை அல்லது *டேவா* என்று குறிப்பிட்டார். நோவாவின் பேழை மிகப்பெரியதாக இருந்தபோது, மோசேயின் பேழை மிகவும் சிறியதாக இருந்தாலும், மோசேயும் நோவாவும் ஒரு பேழை அல்லது *டேவா* மூலம் தண்ணீரினால் ஏற்படும் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டினார்.

மூன்றாவதாக, தெய்வீக உடன்படிக்கைகளின் முக்கியத்துவம் நோவாவை மோசேயின் முன்னோடியாகவும் நிறுத்துகிறது. நாம் பார்த்திருக்கிறபடி, ஆதியாகமம் 6:18 மற்றும் 9:11-17 இன் படி, நோவா முழு மனுக்குலத்தின் சார்பாக தேவனுடன் உடன்படிக்கை செய்தான். ஆனால் நிச்சயமாக, இஸ்ரவேலுக்கான மோசேயின் முதன்மையான வேலைகளில் ஒன்று தெய்வீக உடன்படிக்கைக்கு மத்தியஸ்தம் செய்வது என்பது நமக்குத் தெரியும். யாத்திராகமம் 19-24 நன்கு விளக்குவது போல், இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலைக்கு வந்தபோது யேகோவா தேவனுடன் ஒரு விஷேசித்த உடன்படிக்கை செய்யும்படிக்கு மோசே தெரிந்து கொள்ளப்பட்டார்.

ஜலத்தின் மூலம் உண்டான நியாயத்தீர்ப்பின் முக்கிய பங்கு இரண்டு மனிதர்களுக்கிடையில் நான்காவது தொடர்பையும் எற்படுத்துகிறது. ஆதியாகமம் 6–9 இல், தேவன் நோவாவையும் அவனுடைய குடும்பத்தினரையும் பூமியின் பொல்லாத ஜனங்களை அழித்த வெள்ளத்தின் மத்தியில் பாதுகாப்பாக அழைத்துச் சென்று விடுவித்தார். அதேவிதமாக, யாத்திராகமம் 13-15 நமக்குச் சொல்வது போல், மோசே இஸ்ரவேல் ஜனங்களை செங்கடலின் தண்ணீரைக் கடந்து எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்தார். அதே தண்ணீர் அவர்களை ஒடுக்கிய எகிப்திய இராணுவத்தினரை அழித்துப் போட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஐந்தாவதாக, நோவாவின் நாட்களிலும் மோசேயின் நாட்களிலும் தண்ணீரை ஒதுக்க தேவன் காற்றை அனுப்பினார். ஆதியாகமம் 8:1 இல் நாம் வாசித்தபடி, நோவாவின் ஜலப்பிரளயத்தின் தண்ணீரை ஒதுக்க தேவன் ஒரு காற்றை அனுப்பினார். இதேபோல், யாத்திராகமம் 14:21 இன் படி, செங்கடலில், ”கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்தார்” என்று பார்க்கிறோம்.

மிருகங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில் ஆறாவது இணைப்பு தோன்றுகிறது. ஆதியாகமம் 6:19 நமக்குச் சொல்வது போல், தேவன் நோவாவிடம் மிருகங்களை பேழைக்குள் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டார். குறைந்தது நான்கு சந்தர்ப்பங்களில், யாத்திராகமப் புத்தகம் இஸ்ரவேல் ஜனங்களுடன் எகிப்திலிருந்து வெளியேறிய பல மிருகங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. தேவன் தாம் குறித்த நாளில் பூமியில் மிருகங்களைக் கொண்டுவர நோவாவுக்குக் கட்டளையிட்டதைப் போலவே, மோசேயும் மிருகங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் கொண்டுவர வேண்டும் என்று கட்டளையிட்டார்.

ஏழாவதாக, தெய்வீக நினைவுகூருதலின் கருப்பொருள் நோவா மற்றும் மோசேயுடன் இணைகிறது. ஆதியாகமம் 8:1 இல், நோவாவின் நாட்களில் தண்ணீர் பிரவாகித்து எழுந்ததால், தேவன் நோவாவை நினைத்தருளி அவன் சார்பாகச் செயல்பட்டார் என்பதை நீங்கள் நினைவு கூரலாம். தேவன் நோவாவை ஜலப்பிரளயத்திலிருந்து காக்கும்படிக்கு உடன்படிக்கை செய்து, அந்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். அதே பிரகாரமாக, தேவன் தமது உடன்படிக்கையை நினைவு கூர்ந்தபடியால் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்ததை மோசேக்கு அறிவித்தார். யாத்திராகமம் 6:5 இல் தேவன் மோசேக்குச் சொன்னதைக் கவனியுங்கள்:

> எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சையும் நான் கேட்டு, என் உடன்படிக்கையை நினைத்தேன். (யாத்திராகமம் 6:5).

ஜலப்பிரளயம் மற்றும் இஸ்ரவேல் மக்களின் யாத்திரையில் தெய்வீக நினைவுகூர்தல் முக்கியப் பங்கு வகித்தது.

இறுதியாக, இயற்கையின் ஆசீர்வாதமும் நோவாவை மோசேயுடன் இணைக்கிறது. நோவா மனுக்குலத்தை அவர்களுக்கு நன்மை பயக்கும் ஒரு நீடித்த மற்றும் நிலையான இயற்கை ஒழுங்கு உள்ளதாக இருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணின ஒரு புதிய உலகிற்குக் கொண்டு வந்தான். இதே பாணியில், மோசே இஸ்ரவேல் மக்களிடம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில், இயற்கையானது நிலையானதாக இருந்து நன்மை பயக்கும் என்று கூறினார்.

நோவாவுக்கும் மோசேக்கும் இடையிலான இந்த தொடர்புகளை மனதில் கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்கு இந்த ஒற்றுமைகளினால் ஏற்படக்கூடிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தாக்கங்களைக் காணும் நிலையில் நாம் இருக்கிறோம் மோசே ஏன் இந்த தொடர்புகளை ஏற்படுத்தினார்?

## தாக்கங்கள்

இப்பாடத்தின் உண்மையான தாக்கங்களைப் புரிந்து கொள்ள, இஸ்ரவேல் மக்கள் மோசேக்கு எதிராக அவருடைய அதிகாரம், கானான் பயணம் மற்றும் சுதந்தரிப்பதைக்குறித்த அவரது திட்டத்தின் ஞானத்தைக் கேள்விக்குள்ளாக்கி தீவிரமாகக் கலகம் செய்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவருடைய ஊழியத்திற்கு ஏற்பட்ட சவால்கள் மோசேயைத் தனக்கும் நோவாவுக்கும் இடையேயான தொடர்பை ஏற்படுத்த வழிவகுத்தது.

ஆதிகாலக் கொடூர வன்முறையிலிருந்து மனுக்குலத்தை மீட்பதற்கும், பெரும் ஆசீர்வாதங்களின் புதிய உலகில் மீண்டும் மனுக்குலத்தை நிலைநிறுத்துவதற்கும் தேவன் நோவாவை விடுதலையின் ஜலப்பிரளயத்தில் பயன்படுத்தினார். அதே வழியில், எகிப்தின் கொடூரமான வன்முறையிலிருந்து இஸ்ரவேலை விடுவிப்பதற்கும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் புதிய உலகிற்கு இஸ்ரவேலைக் கொண்டுவருவதற்கும் தேவன் மோசேயைத் தெரிந்தெடுத்தார். இஸ்ரவேலுக்கான மோசேயின் வடிவமைப்பு நோவாவின் ஜலப்பிரளயத்தைப் போன்றே தேவனின் கரத்திலிருந்து வந்தது என்பதை யாரும் மறுக்கவே முடியாது.

விடுதலையின் ஜலப்பிரளயத்தின் உண்மையான அர்த்தத்தைப் பார்த்திருக்கும் நாம், இப்போது ஆதியாகமம் 9:18-10:32 இல் நோவாவின் குமாரரைப் பற்றிய மோசேயின் பதிவுக்குத் திரும்ப வேண்டும்.

# நோவாவின் புத்திரர்

மோசே இந்த விஷயத்தை ஏன் தனது ஆதி வரலாற்றில் சேர்த்தார்? இந்த விஷயங்களை இஸ்ரவேலின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் அவரது நோக்கம் என்ன? மோசேயுடைய பதிவின் இந்தப் பகுதியை ஆராய்வதற்கு, நாம் மூன்று பிரச்சனைகளைப் பார்ப்போம்: முதலில், கானானைப் பற்றிய அவரது சிறப்புக் கவனம்; இரண்டாவது, முரண்பாட்டின் கருப்பொருள்; மற்றும் மூன்றாவது, இஸ்ரவேலுக்கான இந்த மையக்கருத்துகளின் தாக்கங்கள். கானானைப் பற்றி மோசே கவனம் செலுத்திய வழியை முதலில் கருத்தில் கொள்ளுங்கள்.

## கானான்

நோவா குடித்து வெறித்து எழுந்தபின் காம் தன்னை கனவீனப்படுத்தியதையும், சேம் மற்றும் யாப்பேத் அவரை கனப்படுத்தியதையும் உணர்ந்தான் என்று வாசித்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். நோவா தன்னுடைய மற்ற மகன்களை ஆசீர்வதித்தது போல காம் மீது கோபம் கொண்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவனைச் சபித்தது இப்போது நியாயமானதாகத் தோன்றலாம். ஆனால் நடந்தது இதுவல்ல. ஆதியாகமம் 9:25-27 இல் நோவா கூறியதை முழுவதுமாகக் கேளுங்கள்:

> ”கானான் சபிக்கப்பட்டவன்! தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்.” ”சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான். யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்” என்றான் (ஆதியாகமம் 9:25-27).

இந்த வேதபகுதியில் நாம் பார்ப்பது போல், சேம், மற்றும் யாப்பேத் தங்களின் நீதிக்காக பொருத்தமான வெகுமதிகளைப் பெற்றனர், ஆனால் காமின் பெயர் இங்கே குறிப்பிடப்படவேயில்லை. மாறாக, காமின் மகன் கானான் நோவாவின் சாபத்தைப் பெற்றவனானான்.

இந்த சம்பவத்தை நாம் கவனமாகப் பார்க்கும்போது, காம் தனது சகோதரர்களை விட வித்தியாசமான பாத்திரமாக இருப்பதை நாம் காண்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், கானானின் தகப்பனான காம் என்பதைத் தவிர அவனுக்குச் சிறிய முக்கியத்துவம் கூட இல்லை. இந்த சம்பவத்தில் காமைப் பற்றி மோசே எழுதிய விதத்தைக் கவனியுங்கள். 9:18 இல் நாம் வாசிக்கிறோம்:

> பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம் காம் யாப்பேத் என்பவர்களே. (காம் கானானுக்குத் தகப்பன்) (ஆதியாகமம் 9:18).

அதே அடையாளம் 9:22 இலும் தோன்றுகிறது:

> கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டான் (ஆதியாகமம் 9:22).

பல விஷயங்களில், இந்த சம்பவத்தின் பின்னணியில் காமின் முக்கியத்துவம் மங்கி அவனது மகனான கானான், சேம் மற்றும் யாப்பேத்துடன் இணைந்து தனது இடத்தைப் பிடித்தான்.

கானானைப் பற்றிய மோசேயின் விசேஷித்த முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, நாம் நோவாவின் புத்திரரை அவர் நடத்திய விதத்தில் தோன்றும் இரண்டாவது கரிசனையான ஜலப்பிரளயத்திற்குப் பிறகு புதிய ஒழுங்கில் உள்ள முரண்பாட்டிற்குத் திரும்பலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## முரண்பாடு

நோவாவின் புத்திரரைப் பற்றிய மோசேயின் கவனத்தில் முரண்பாட்டின் கருப்பொருள் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த கருப்பொருளைத் தவறவிடுவது என்பது இச்சம்பவத்தின் மிக முக்கியமான அம்சத்தை இழப்பதாகும். இந்த முரண்பாடு என்னும் சிந்தனை ஆதியாகமம் 9:25-27 லும் தோன்றுகிறது:

> ”கானான் சபிக்கப்பட்டவன்! தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்.” ”சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான். யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்” என்றான் (ஆதியாகமம் 9:25-27).

இந்த வேதபகுதியில் கானானின் சாபத்தை மூன்று முறை திரும்பச் சொல்வதன் மூலம் மோசே எவ்வாறு முரண்பாட்டின் உறுதியை வலியுறுத்தினார் என்பதைக் கவனியுங்கள். 25 ஆம் வசனத்தில், கானான் ”அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்” அல்லது கற்பனை செய்யக்கூடிய மிகக் கீழான அடிமை என்று சாபத்தை அவர் உச்சரித்தார். 26 ஆம் வசனத்தில், கானான் சேமின் அடிமையாக இருப்பான் என்று நோவா கணித்தான். 27 வது வசனத்தில், கானான் யாப்பேத்தின் அடிமையாகவும் மாறுவான் என்று மோசே கூறினார். இப்படி மீண்டும் மீண்டும் கூறுவதன் மூலம், கானான் நிச்சயமாக அவனது சகோதரர்களால் மேற்கொள்ளப்படுவான் என்ற உண்மையை மோசே வலியுறுத்தினார்.

இதைத் தாண்டி, இந்த வசனங்கள் கானானை மேற்கொள்பவனாக சேமைச் சித்தரிக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வசனம் 27 இல், ”யாப்பேத் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்” என்ற வார்த்தைகள் இப்படியாக ”கானான் தனது அடிமையாக இருக்க சேமின் கூடாரங்களில் யாப்பேத் வாழட்டும்” என்று சிறப்பாக மொழிபெயர்க்கப்படலாம். நோவாவின் எண்ணம் என்னவென்றால், யாப்பேத் சேமுடன் சேர்ந்திருக்கும் வரையில் கானான் யாப்பேத்துக்கு அடிபணிவான் என்பதாகும். உண்மையில், கானானை அடிபணியச் செய்வதில் சேம் முன்னிலை வகிக்க வேண்டும் என்று மோசே நம்பினார்.

ஆகவே, வெள்ளத்திற்குப் பிறகு எதிர்பார்த்திராத புதிய ஒழுங்கின் ஒரு முக்கியமான அம்சத்தை மோசே நிறுவியிருப்பதை இந்த வேதபகுதியில் நாம் காண்கிறோம். மனுக்குலத்தின் எதிர்காலம் என்பது சேமின் சந்ததியினர் கானானின் சந்ததியினரை அடிபணியச் செய்யும் வியத்தகு முரண்பாட்டை ஏற்படுத்தும் என்பதை அவர் புரிந்து கொண்டார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கானான் மற்றும் முரண்பாட்டின் கருப்பொருள் மீதுள்ள மோசேயின் கவனத்தின் வெளிச்சத்தில், பண்டைய இஸ்ரவேலுக்கான நோவாவின் புத்திரரின் உண்மையான தாக்கங்களை நம்மால் பார்க்க முடிகிறது.

## தாக்கங்கள்

ஜலப்பிரளயத்திற்குப் பிறகான புதிய ஒழுங்கைப் பற்றிய தனது பதிவில் மோசே ஏன் இந்த சம்பவங்களைச் சேர்த்தார்? நல்லது, புதிய ஒழுங்கை இவ்வாறு விவரிக்க மோசேக்கு ஒரு குறிப்பிட்ட காரணம் இருந்தது. சேம் மற்றும் கானானுக்கு இடையிலான மோதல் அவரது இஸ்ரவேல் பார்வையாளர்களின் தேவைகளைப் பற்றி நேரடியாகப் பேசியது. அது அவர்களின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான பரிமாணத்தைக் குறிப்பிடுகிறது.

மோசேயின் நோக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோல் ஆதியாகமம் 10:18-19 இல் காணப்படுகிறது. கானானுடைய சில சந்ததியினரை பட்டியலிட்ட பிறகு, மோசே இவ்வாறு எழுதினார்:

> பின்பு கானானியரின் வம்சத்தார் எங்கும் பரவினார்கள். கானானியரின் எல்லை, சீதோன்முதல் கேரார் வழியாய்க் காசாமட்டுக்கும், அது முதல் சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம் வழியாய் லாசாமட்டுக்கும் இருந்தது (ஆதியாகமம் 10:18-19).

இந்த குறிப்பிட்ட புவியியல் குறிப்புகள் மோசேயின் இஸ்ரவேல் வாசகர்களுக்கு நன்கு தெரிந்தவை. கானானின் சந்ததிகள், அல்லது கானானியர்கள், வடக்கிலிருந்து தெற்கே சிதோனில் இருந்து காசா வரையிலும், சோதோம் மற்றும் கொமோரா பகுதியிலும் குடியேறினர். வாக்குத்தத்த நிலத்தில் குடியேறிய கானானின் சந்ததியினரிடம் மோசே குறிப்பிட்ட அக்கறை காட்டினார். சேம் வம்சம் தேவனால் விசேஷமாக அழைக்கப்பட்டபடியினால், இஸ்ரவேல் மக்கள் கானானியர்களின் இந்த நிலத்திற்குச் சென்று தங்கள் தேசம் என்று உரிமை கோர முடியும்.

எனவே, நோவாவின் மகன்களைப் பற்றிய மோசேயின் கணக்கானது வெறுமனே கடந்த காலத்தின் கணக்கைக் கொடுக்க வடிவமைக்கப்படவில்லை என்பதை நாம் காண்கிறோம். பூர்வகால வரலாற்றில் தேவன் நியமித்ததைப் போலவே, வெற்றிபெறுவதற்கு முன்னோக்கிச் செல்ல இஸ்ரவேல் மக்களுக்கான மோசேயினுடைய அழைப்பின் பின்னணியாக இது வடிவமைக்கப்பட்டது. இதன் விளைவாக, கானான் நிலத்தை கைப்பற்றுவதற்கான மோசேயின் அழைப்பை எதிர்த்த இஸ்ரவேலர்கள் மோசேயை வெறுமனே எதிர்க்கவில்லை. அவர்கள் உண்மையில் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தேவன் பூமிக்கு ஏற்படுத்திய கட்டளையாகிய தேவனின் திட்டத்தை, எதிர்த்தனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூல வாசகர்களாகிய இஸ்ரவேலர்களுக்கு வெள்ளம் மற்றும் நோவாவின் குமாரர்களைப் பற்றிய கணக்குகள் எவ்வாறு பொருந்தும் என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், நாம் கவனம் செலுத்தும் மூன்றாவது காரியத்தைப் பார்க்க வேண்டும்: ஆதியாகமம் 11:1-9 இல் பாபேலின் தோல்வியைப் பற்றி எழுதும்போது மோசேயின் உண்மையான நோக்கம்.

# பாபேலின் தோல்வி

பாபேலின் தோல்வியைப் பற்றிய கதையை இஸ்ரவேலர்கள் தங்கள் வாழ்வில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று மோசே விரும்பினார் என்பதைப் புரிந்துகொள்ள, இந்த பத்தியில் மூன்று அம்சங்களைப் பார்ப்போம்: முதலில், நகரத்தைப் பற்றிய மோசேயின் விளக்கம்; இரண்டாவது, யேகோவா தேவனின் வெற்றி பற்றிய அவரது விளக்கம்; மூன்றாவதாக, இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்த நிலத்தை நோக்கி கடந்துசெல்லும்போது அவர்களுக்கு ஏற்படும் தாக்கங்கள். முதலில் நகரத்தைப் பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

## நகரம்

நகரத்தின் பெயர், பாபல், பின்நாட்களில் பாபிலோன் என்று அறியப்பட்ட நகரத்திற்கு ஒத்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். மோசேயின் காலத்தில், பாபிலோன் நகரமானது பண்டைய கிழக்கத்திய பகுதிகளில் நன்கு அறியப்பட்டிருந்தது. இது பல வருடங்களாக நாகரிகத்தின் மையமாக இருந்து வந்தது, அதன் புகழ் புராண விகிதத்தை எட்டியது. ஜலப்பிரளயத்திற்குப் பிறகு பாபேல் என்ற இடத்தைப் பற்றி மோசே எழுதியபோது, அவரது வாசகர்களாகிய இஸ்ரவேலர்கள் இந்த இடத்தை ஒரு பெரிய நகர்ப்புற மையத்தின் பூர்வத் தோற்றம் என்று உடனடியாக அங்கீகரித்திருப்பார்கள்.

## வெற்றி

ஆதியாகமம் 11:1-9 இன் இரண்டாவது முக்கியமான அம்சம் என்னவென்றால், இந்த பெரிய பூர்வ நகரத்தின் மீது யேகோவாவின் வெற்றியை மோசே விவரித்த விதமாகும். இந்த கதையின் பல இடங்களில், பாபேல் குடிகளின் கண்ணோட்டத்தை தனது சொந்த உண்மையான கண்ணோட்டத்துடன் வேறுபடுத்தி மோசே தேவனுடைய வெற்றியின் பிரம்மாண்டத்தை காட்டினார். உதாரணமாக, மோசே சிதறிப்போதலின் கருப்பொருளைக் கையாண்ட விதத்தைப் பாருங்கள், அல்லது எபிரெய பாஷையில், (פּוּץ) *புட்ஸ்* என்கிற வினைச்சொல்லை கவனியுங்கள். ஒருபுறம், பாபேல் நகரவாசிகள் அவர்கள் சிதறடிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மிகுந்த கவலை கொண்டிருந்தனர். அவர்கள் சிதறடிக்கப்படலாம் என்ற சாத்தியக்கூறுடன் 11:4 இல் அவர்கள் "முழு பூமியின் மீது சிதறிப் போகாமல் இருக்க" அவர்கள் நகரத்தை கட்டியிருப்பதைக் காண்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் இதற்கு மாறாக, பாபேல் மக்கள் நடக்க விரும்பாததை தேவன் துல்லியமாக செய்தார் என்று மோசே இரண்டு முறை அறிக்கை செய்தார். 11:8 இல் நாம் வாசிக்கிறோம்:

> அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்... (ஆதியாகமம் 11:8).

மீண்டும் 11:9 இல் நாம் அதைக் காண்கிறோம்:

> கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார் (ஆதியாகமம் 11:9).

பழைய ஏற்பாட்டில் அடிக்கடி, "சிதறடிக்கப்படுதல்" என்ற சொல் யுத்தத்தில் முழுமையான தோல்வியினுடைய எதிர்மறையான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. தோற்கடிக்கப்பட்ட வீரர்கள் சிதறடிக்கப்படுகிறார்கள், எதிரிகள் அவர்களை விரட்டுகிறார்கள், அவர்கள் தப்பி ஒடுகையில் அவர்களை படுகொலை செய்கிறார்கள். இந்தக் கதையிலும் இது தான் பொருள். மோசே இந்தக் கதையை யேகோவா தேவனின் வியக்கத்தக்க வெற்றியின் கணக்காக முன்வைத்தார். பாபேல் நகருக்கு எதிராகப் போரிடவும், தப்பி ஒடும் மக்களை பூமி முழுவதும் விரட்டவும் யேகோவா தேவன் தனது வானசேனையை அழைத்தார்.

மோசே தனது பார்வையை பாபேல் குடிமக்களிடமிருந்து வேறுபடுத்திய மற்றொரு வழி, நகரத்தின் அளவு மற்றும் அதன் கோபுரத்தைப் பொறுத்ததாகும். ஆதியாகமம் 11:4 இன் படி, பாபேல் மக்கள் தங்கள் தெய்வங்களின் இடமான வானத்தை அடையத்தக்க ஒரு கோபுரத்தை விரும்பினர். ஆனால் இந்த யோசனையை மோசே பரிகாசம் செய்தார். அதற்குப் பதிலாக, ஆதியாகமம் 11:5 இல் அவர் இவ்வாறு எழுதினார்:

> மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார் (ஆதியாகமம் 11:5).

எபிரெய வார்த்தையான *யாரட் (יָרַד)* இங்கு "இறங்கி வந்தார்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளதற்கு இந்த கதையில் ஒரு குறிப்பிட்ட அர்த்தம் உள்ளது. தேவன் நகரத்தைக் கவனிக்கவில்லை; அவர் நகரத்திற்குக் கூட வரவில்லை. மாறாக, பாபேலில் குடியிருப்பவர்கள் வானத்தை அடையும் ஒரு கோபுரத்தை கட்ட விரும்பினார்கள், யேகோவா தேவன் நகரத்தை பார்க்கப் பரலோகத்தின் உயரத்திலிருந்து இறங்கிவர வேண்டியிருந்தது என்று மோசே வலியுறுத்தினார். எனவே மோசே பாபேல் குடிகளின் பாசாங்குத்தனத்தை பரிகாசம் செய்ததை நாம் காண்கிறோம். யேகோவா தேவனின் பார்வையில், இந்த நகரம் ஒரு சிறிய புள்ளியை விட சற்று அதிகமாக இருந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறுதியாக, பாபேலின் தோல்வியானது மோசே இந்த பழமையான நகரத்தின் நற்பெயரை இழிவுபடுத்த வழிவகுத்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நகரவாசிகள் அதை பாபேல் என்று அழைத்தனர். மெசொப்பொத்தாமியாவின் மொழிகளில், *பாபேல்* என்ற சொல்லுக்கு ”தெய்வத்தின் வாசல்” என்று பொருள். இந்தப் பெயர் அவர்களின் ஜிகுராட் கட்டமைப்பானது உண்மையில் தெய்வங்களுக்கான நுழைவாயிலை உருவாக்கியது என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியது, மேலும் அவர்கள் பரலோகத்தின் வல்லமைகளால் பாதுகாக்கப்பட்டனர் என்று நம்பினர்.

ஆனால் மோசே நகரின் இந்தப் பெயருக்கு மாறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார். யேகோவா தேவன் பாபேலைக் கடுமையாக தோற்கடித்ததால், அந்த நகரம் தேவனின் வாசல் அல்ல. அப்படியானால், இந்தப் பெயரின் அர்த்தம் என்ன? ஆதியாகமம் 11:9 இல் மோசேயின் வியக்கத்தக்க பரிகாசமான பதில் காணப்படுகிறது:

> பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் என்னப்பட்டது (ஆதியாகமம் 11:9).

இந்த வசனத்தில் காணப்படும் மோசேயினுடைய பரிகாசத்தைப் புரிந்துகொள்வதற்கு, அவர் எவ்வாறு இந்த இரண்டு எபிரெய வார்த்தைகளினுடைய ஒலியைக் கையாண்டார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். “அதின் பேர் பாபேல் என்னப்பட்டது” என்று மோசே முதலில் கூறினார். “பாபேல்” என்ற எபிரெய வார்த்தை வெறுமனே *பாபேல்* (בָּבֶל) என்பதாகும், இது மெசொபொதாமியர்கள் அந்த இடத்தை அழைத்ததின் எபிரெய பதிப்பு ஆகும். ஆனால், மோசே, தேவன் ஜனங்களுடைய பாஷையை அங்கே தாறுமாறாக்கினபடியால் அந்த நகரத்திற்கு இந்தப் பெயரை வைத்திருப்பதாக விளக்கினார். ”தாறுமாறு” என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரேய வார்த்தை *பலால்* (בָּלַל) என்பதாகும், இது *பாபேல்* என்ற எபிரெய வார்த்தையின் ஒலியை ஒத்திருந்தது இது மோசேயினுடைய பரிகாசத்திற்கு பொருந்தியது. அவர் இந்த பழங்கால நகரத்தை பாபேல் என்று அழைப்பதற்கு *பலால்* அல்லது குழப்பம் தான் உண்மையான காரணம் என்று கூறினார். எனவே மோசேயின் பார்வையில், பாபேல் என்ற பெயர் இந்த இடத்திற்கு பொருத்தமாயிற்று. இது தேவனின் வாசல் என்பதால் அல்ல, ஆனால் இது உலகம் முழுவதுக்குமான குழப்பம், குழப்பம் நிறைந்த இடமாக இருந்தது. இந்த பரிகாசத்தின் மூலமாக, மோசே பாபல் நகரம் தனது காலத்தில் கொண்டிருந்த அற்புதமான நற்பெயரை முற்றிலும் மாற்றினார். அவர்களுடைய தேவனாகிய யேகோவா தேவனின் வெற்றி பூர்வகால வரலாற்றின் மிகப் பெரிய நகரத்திலிருந்து ஒரு நகைச்சுவையை உருவாக்கியது என்று கூறியதன் மூலம் அவர் இஸ்ரவேலர்களை மகிழ்ச்சியான சிரிப்பில் வழிநடத்தினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யேகோவா தேவனுடைய வெற்றி மற்றும் நகரத்தைக் குறித்ததான விளக்கம் இவற்றை மனதில் வைத்துக்கொண்டு, வாக்குத்தத்த நிலத்தை நோக்கிச் செல்லும் இஸ்ரவேல் மக்களுக்கு இந்த கதையின் மூலமாக ஏற்படும் தாக்கங்கள் குறித்து நாம் பார்க்க இருக்கிறோம்.

## தாக்கங்கள்

நமக்குத் தெரிந்தபடி, காதேஸ்பர்னேயாவில், மோசே கானான் தேசத்திற்கு உளவாளிகளை அனுப்பினார் அவர்கள் மோசமான அறிக்கைகளுடன் திரும்பினர். அங்குள்ள சேனைகள் மிக அதிகமாக இருப்பதால் இஸ்ரவேல் மக்கள் கானான் நிலத்தை கைப்பற்ற முடியாது என்று அவர்கள் கூறினர். இதன் விளைவாக, இஸ்ரவேலர்கள் வெற்றியை விட்டு விலகி அடுத்த நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தனர். அடுத்த தலைமுறையினர் வாலிபர்களாக ஆன பிறகுதான் மோசே மீண்டும் இஸ்ரவேல் மக்களை கானானுக்கு எதிராக நகர்த்தத் தயாரானார்.

இந்த மோசமான அறிக்கைகளின் ஒரு அம்சம் பூர்வகாலத்தில் பாபேல் நகரத்தினுடைய தோல்வியின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள உதவுகிறது. உபாகமம் 1:28 இல் கூறப்பட்டுள்ளபடி கானான் நகரங்களைப் பற்றி வேவுக்காரர்கள் கூறியதை கவனியுங்கள்:

> அந்த ஜனங்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்களும், நெடியவர்களும், அவர்கள் பட்டணங்கள் பெரியவைகளும், வானத்தையளாவும் மதிலுள்ளவைகளுமாய் இருக்கிறதென்றும் சொன்னார்கள் (உபாகமம் 1:28).

துரதிருஷ்டவசமாக, இந்த வசனத்தின் பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்புகள் கானானிய நகரங்களின் இந்த விளக்கத்திற்கும் பாபேல் கோபுரத்திற்கும் இடையிலான தொடர்பை கொண்டுவர முடியவில்லை. வேவுக்காரர்கள் "வானத்தையளாவும் சுவர்கள்" பற்றி பேசுகையில், "வானம்" என்பதற்கான வார்த்தை எபிரெய வார்த்தையாகிய *ஷமாயிம்* (שָׁמַיִם) என்பதாகும், இது பெரும்பாலும் "பரலோகம்" என மொழிபெயர்க்கப்படுகிறது. உண்மையில், ஆதியாகமம் 11:4 இல் "வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரம்" என்று பாபேல் கோபுரத்தைப் பற்றி விவரிக்கும் போது அதே சொல் பயன்படுத்தப்படுகிறது. இரண்டு காரியங்களிலும், நகரங்கள் வானத்தின் உயரத்தை அடைந்ததால் அவை வெல்ல முடியாதவை என்ற எண்ணம் இருந்தது.

எனவே மோசே பண்டைய நகரமான பாபேலுக்கும் கானான் நகரங்களுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தினார். கானான் நகரங்களைச் சுற்றியுள்ள சுவர்கள் வானத்தை அடைந்ததாக இஸ்ரவேலர்கள் நினைத்தனர், பாபேலில் கோபுரத்தைக் கட்டியவர்கள் தங்கள் சிகரங்கள் வானத்தை அடைந்துவிட்டதாக நினைத்தனர். பாபேல் நகரத்திற்கும் கானான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நகரங்களுக்கும் இடையிலான இந்த தொடர்பு மோசேயின் நோக்கத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது. எளிமையாகச் சொன்னால், கானானிய நகரங்கள் இஸ்ரவேல் மக்களுக்கு முன் வானத்தை அடைவது போல் தோன்றினாலும், அவை இன்னும் யேகோவா தேவனின் வல்லமைக்கு பொருந்தவில்லை. பூர்வ நாட்களில், மனிதகுலம் அறிந்த மிகப் பெரிய நகரத்திற்கு எதிராக யேகோவா தேவன் செயல்பட்டார், அதன் கோபுரம் வானத்தையும் அடைந்தது. ஆனாலும், கானானின் எந்த நகரத்தையும் விட பெரியதாக இருந்த இந்த பூர்வ நகரம், யேகோவா தேவனால் எளிதில் அழிக்கப்பட்டது.

பண்டைய ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் மனித இனத்தை ஒரு புதிய ஒழுங்குக்கு நேராய் விடுவித்ததைப் போலவே, அவர் இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்தார். தேவன் சேமுக்கும் கானானுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தியதைப் போலவே, மோசே இஸ்ரவேல் மக்களை கானானியர்களின் நிலத்தை நோக்கி வழிநடத்தினார். தேவன் பெரிய நகரமாகிய பாபேலைத் தோற்கடித்தது போல, அவர் விரைவில் கானான் நகரங்களுக்கு எதிராக இஸ்ரவேல் மக்களுக்கு வெற்றியைக் கொடுப்பார். பண்டைய வரலாற்றைப் பற்றிய இந்த அதிகாரங்களிலிருந்து, வாக்குத்தத்த நிலத்தை நோக்கி மோசேயைப் பின்பற்றுவது சரியான திசையில் செல்வதாக இஸ்ரவேல் மக்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இதுவரை, ஆதியாகமம் 6:9–11:9 இல் மோசேயினுடைய பதிவின் இலக்கிய அமைப்பு மற்றும் உண்மையான அர்த்தத்தை நாம் பார்த்தோம். இப்போது நாம் மூன்றாவது கேள்வியைக் கேட்கத் தயாராக இருக்கிறோம்: இன்றைய நம் வாழ்வில் இந்தக் காரியங்களைப் பயன்படுத்துவதற்குரிய சில வழிகள் என்ன?

# நவீன பயன்பாடு

நமது வழக்கமான பாணியில், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று நிலைகளைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் விளக்கத்தைப் பின்பற்றுவதன் மூலம் நவீன பயன்பாட்டின் கேள்வியை அணுகுவோம். விடுதலைக்கான ஜலப்பிரளயம் மற்றும் அதன் விளைவாக வரும் புதிய ஒழுங்குகள் கிறிஸ்துவின் முதல் வருகையில் ராஜ்யத்தின் துவக்கத்திற்கு எவ்வாறு பொருந்தும் என்பதை முதலில் பார்ப்போம். சபை வரலாற்றின் வழியாக ராஜ்யத்தின் தொடர்ச்சிக்கு இந்த விஷயங்களின் பொருத்தத்தை நாம் பார்ப்போம். இறுதியாக, கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது, புதிய வரலாறு எவ்வாறு பண்டைய வரலாற்றின் இந்தப் பகுதியை இராஜ்ஜியத்தினுடைய எல்லாவற்றிற்குமான முடிவுக்குப் பயன்படுத்துகிறது என்பதை நாம் ஆராய்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசேயின் பண்டைய வரலாற்றின் இறுதி அதிகாரங்களை நாம் இந்த வழியில் அணுகும்போது, புதிய ஏற்பாடு இஸ்ரவேல் மக்களுக்கான மோசேயின் உண்மையான நோக்கத்தை கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய மூன்று நிலைகளுக்கும், கடந்த காலத்தில் அவருடைய கிரியைகளுக்கும், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கும் விரிவுபடுத்துவதைக் கண்டுபிடிப்போம். கிறிஸ்துவின் முதல் வருகையின் வெளிச்சத்தில் இந்தக் கருப்பொருள்களைப் புதிய ஏற்பாடு பார்க்கும் விதங்களைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## ராஜ்யத்தின் தொடக்கம்

ராஜ்யத்தின் துவக்கத்தில், ஆதியாகமம் 6:9–11:9 இல் மோசே வலியுறுத்திய கருப்பொருள்களுடன் தொடர்புடைய வழிகளில் கிறிஸ்து தனது மக்களின் சார்பாக ஒரு பெரிய இரட்சிப்பை நிறைவேற்றினார். இந்த தொடர்புகளை நாம் குறைந்தது இரண்டு வழிகளில் காணலாம்: கிறிஸ்து மத்தியஸ்தம் செய்த உடன்படிக்கை மற்றும் அவர் அடைந்த வெற்றி.

### உடன்படிக்கை

ஒருபுறம், கிறிஸ்து தனது மக்களுக்கு உடன்படிக்கை மூலம் விடுதலையைக் கொண்டுவந்தார். இந்த உடன்படிக்கை தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்து அவர்களை மீட்டுக்கொண்டது. நாம் பார்த்தபடி, நோவா ஒரு உடன்படிக்கையின் மத்தியஸ்தராக ஒரு சிறப்புப் பாத்திரத்தை வகித்தார், மேலும் இஸ்ரவேல் மக்களுக்கு தனது சொந்த ஊழியத்தை விளக்கியபோது மோசே இந்த உண்மையை எடுத்துக் கொண்டார் இதேபோன்ற பாணியில், புதிய ஏற்பாடு கிறிஸ்து நம் மீட்பர் என்று போதிக்கிறது, ஏனெனில் அவர் இந்த உலகத்தில் வந்தபோது ஒரு புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தரானார்.

தேவனுடைய மக்கள் தெய்வீக நியாயத்தீர்ப்பின் கீழ் இருக்கும்போது கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்பதை கிறிஸ்தவர்கள் அடிக்கடி உணரத் தவறிவிட்டனர். கி.மு. 586 இல், பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கைகளை இஸ்ரவேல் மக்கள் வெளிப்படையாக மீறியதால், பாபிலோனியர்கள் எருசலேமை அழித்தனர் மற்றும் இஸ்ரவேல் மக்கள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து முழுமையாக விடுதலையடையவில்லை. ஆனால் தீர்க்கதரிசியான எரேமியா, எதிர்காலத்தில் ஒரு புதிய உடன்படிக்கையை நிறுவுவதன் மூலம் தேவன் ஒரு கூட்டம் மக்களை நாடுகடத்தப்படும் ஆக்கினையிலிருந்து மீட்பார் என்று முன்னறிவித்தார். எரேமியா 31:31 இல் தீர்க்கதரிசி இவ்வாறாக அறிவித்தார்:

> இதோ, "நாட்கள் வருமென்று" கர்த்தர் சொல்லுகிறார், "அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்" (எரேமியா 31:31).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அநேக கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பதுபோல, இந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இயேசு இந்த உலகத்தில் வந்தார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. இறுதி இராப்போஜனத்தின்போது இயேசு தாமே சீஷர்களிடம் இந்த பாத்திரத்தைப் பற்றி ஒப்புக்கொண்டார். லூக்கா 22:20 இல் நாம் வாசிக்கிறபடி, அவர் அவர்களிடம் கூறினார்:

> இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது (லூக்கா 22:20).

ஆகவே, தெய்வீக உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நோவா நியாயத்தீர்ப்பிலிருந்து விடுவித்ததைப் போலவே, ராஜ்யத்தின் தொடக்கத்தில், சிலுவையில் சிந்திய இரத்தத்தின் புதிய உடன்படிக்கையை மத்தியஸ்தம் செய்வதன் மூலம் நியாயத்தீர்ப்பிலிருந்து அவரை நம்பியவர்களை இயேசு விடுவித்தார்.

## வெற்றி

ஒரு புதிய உடன்படிக்கையைக் கொண்டுவருவதோடு, இயேசுவின் பூமிக்குரிய ஊழியமானது ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றி என்ற கருப்பொருளை நிறைவேற்றியது. ஜலப்பிரளயத்திற்குப் பிறகான புதிய ஒழுங்கின் ஒரு பகுதியாக ஆவிக்குரிய யுத்தத்தின் கருப்பொருளில் மோசே கவனம் செலுத்தினார். உலகின் புதிய ஒழுங்கானது இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தின் வெற்றியை நோக்கி முன்னேற வேண்டும் என்று எதிர்பார்ப்பதை அவர் உறுதிப்படுத்தினார், மேலும் அவர்களுக்கு ஒரு பெரிய வெற்றியை உறுதி செய்தார். ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கொலோசெயர் 2:15 இல் ராஜ்யத்தின் துவக்கத்தில் கிறிஸ்துவின் வெற்றியை பவுல் விவரித்த விதத்தைப் பாருங்கள்:

> துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, [கிறிஸ்து] வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (கொலொசெயர் 2:15).

நாம் இங்கே பார்ப்பது போல், இயேசுவின் முதலாம் வருகையில் அவர் பெற்ற வெற்றி அரசியல் அல்ல, ஆவிக்குரியது. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் அவரது காலத்தில் உலகை ஆட்சி செய்த தீமையான துரைத்தனங்களையும் ஆன்மீக அதிகாரங்களையும் தோற்கடிக்கத் தொடங்கியது. அவருடைய மீட்பின் பணியானது, யேகோவா தேவன் பண்டைய நகரமான பாபேலைக் குறித்தும், பின்னர் கானானின் பெரிய நகரங்களை அழித்ததுமான ஒரு காட்சியை உருவாக்கியதைப் போன்ற ஒரு பொதுக் காட்சியை உருவாக்கியது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த அர்த்தத்தில், இயேசு தனது புதிய உடன்படிக்கையின் மூலம் விடுவித்தது மட்டுமல்லாமல், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் இருளினுடைய ஆவிக்குரிய ஆதிக்கத்தை வென்றார். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தை நீண்ட காலத்திற்கு முன்பு ஆதியாகமம் புத்தகத்தில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இறுதி வெற்றியின் தொடக்கமாக பார்க்கின்றனர்.

நாம் எதிர்பார்த்தபடி, புதிய ஏற்பாடானது ஆதியாகமம் 6:9–11:9 இன் கருப்பொருள்களை கிறிஸ்துவின் முதல் வருகையுடன் வெறுமனே தொடர்புபடுத்தவில்லை. நாம் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கிற காலமான, ராஜ்யத்தின் தொடர்ச்சிக்கும் அவை பொருந்தும்.

## ராஜ்யத்தின் தொடர்ச்சி

புதிய ஏற்பாடானது கிறிஸ்துவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகைகளுக்கு இடையிலான காலத்தை மோசேயின் பண்டைய வரலாற்றின் கடைசி அதிகாரங்களுடன் தொடர்புடையதான இரண்டு வழிகளில் விவரிக்கிறது. இந்த கண்ணோட்டங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஞானஸ்நானம் மற்றும் ஆவிக்குரிய யுத்தத்தின் முக்கியத்துவத்துடன் நேரடியாக தொடர்புடையவை. இந்த யுகத்தில் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும்போது, நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தின் முக்கியத்துவத்தையும், அந்த ஜலப்பிரளயத்திற்குப் பிறகு நியமிக்கப்பட்ட புதிய ஒழுங்கையும் நாம் தொடர்பு கொள்கிறோம்.

### ஞானஸ்நானம்

புதிய ஏற்பாட்டின் ஒரு பத்தியில் குறிப்பாக ஞானஸ்நானத்தை, நோவாவின் நாட்களில் உண்டான விடுதலைக்கான ஜலப்பிரளயத்துடன் தொடர்புடையதாக விவரிக்கிறது. 1 பேதுரு 3:20-22 இல் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதியதைப் கவனியுங்கள்:

> அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது (1 பேதுரு 3:20-22).

இந்த குறிப்பிடத்தக்க வேத பகுதியில், பேதுரு, நோவாவின் நாட்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்துடன் ராஜ்ஜியத்தின் தொடர்ச்சியின் போது ஒவ்வொரு நபருக்கும் உண்டாகிற இரட்சிப்பின் அனுபவத்தை நேரடியாக தொடர்புபடுத்தினார். நோவா மற்றும் அவரது குடும்பத்தினர் ஜலத்தின் மூலம் காப்பாற்றப்பட்டனர் என்பதை அவர் குறிப்பிட்டார். ஜலத்தின் மூலம் அவர்கள் விடுவிக்கப்பட்டது மனிதகுலம் ஒரு புதிய ஆசீர்வாத உலகிற்குள் நுழைவதற்கான வழியைத் திறந்து தந்தது.

ஆனால் பேதுரு ஞானஸ்நானத்தின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் நோவாவின் நாள்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்திற்கும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் இடையே ஒரு நேரடி உறவைக் கொண்டுவந்தார். நோவாவின் நாளில் காணப்பட்ட ஜலமானது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் ஜலத்தை அடையாளப்படுத்தியது அல்லது எதிர்நோக்கியது என்று அவர் கூறினார். இந்த பாடத்தில் நாம் பார்த்தது போல், நோவாவின் நாட்களில் உண்டான ஜலமானது கொடுமையும் சீர்கேடும் நிறைந்த உலகத்தை சுத்தப்படுத்தி, ஒரு புதிய துவக்கத்திற்கு வழி திறந்தது, மோசே செங்கடல் வழியாக கடந்து செல்வது போல் எகிப்தின் கொடுங்கோல் ஆட்சியை அகற்றி இஸ்ரவேல் தேசத்திற்கு ஒரு புதிய துவக்கத்தை கொண்டு வந்தது. இதேபோல், ஞானஸ்நானத்திற்குரிய ஜலமானது விசுவாசிகளை அவர்களின் பாவங்களிலிருந்து சுத்தப்படுத்துகிறது மற்றும் கிறிஸ்துவில் நித்திய ஜீவனின் புதிய துவக்கத்தை அவர்களுக்கு வழங்குகிறது.

ஞானஸ்நானமானது தேவனை நோக்கி ஒரு நல்ல மனசாட்சியின் அறிக்கையாகிய உணர்வை மட்டுமே இரட்சிக்கிறது என்று 1 பேதுரு 3:21 கூறுவதை இப்போது நாம் கவனமாக கவனிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஞானஸ்நானத்தின் போது ஜலத்தினால் கழுவுவது ஒருவரையும் இரட்சிக்காது. அதற்குப் பதிலாக, ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையால் மன்னிக்கப்பட்ட மற்றும் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தின் அறிக்கையாகும், அது இரட்சிப்பை அடையாளப்படுத்துகிறது. எனவே, புதிய ஏற்பாட்டில் நோவாவின் நாளில் உண்டான விடுதலைக்கான ஜலப்பிரளயமானது இராஜ்ஜியத்தின் தொடர்ச்சிக்குப் பொருந்துகிறது, ஜலப்பிரளயத்தின் வழியாக நோவா ஒரு புதிய உலகத்திற்கு கொண்டு வரப்பட்டதைப்போல, ஒவ்வொரு முறையும் ஒரு நபர் கிறிஸ்துவிடம் இரட்சிப்பின் விசுவாசத்துடன் வரும்போது, அவர் அல்லது அவள் ஞானஸ்நானத்தினுடைய சுத்திகரிப்பு ஜலத்தின் மூலமாக புது ஜீவனுக்குள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## ஆவிக்குரிய யுத்தம்

எவ்வாறாயினும், நாம் பார்த்தது போல, நோவாவின் நாளில் உண்டான ஜலமானது மனிதகுலத்தை ஒரு ஆவிக்குரிய யுத்தத்திற்குள் விட்டுச் சென்றது என்பதை மோசேயின் பண்டைய வரலாறு குறிக்கிறது. கானானைக் கைப்பற்றுவதன் மூலம் இஸ்ரவேல் மக்களை இந்த புதிய ஒழுங்குக்கு இணங்கும்படி ஊக்குவிப்பதற்காக மோசே முதலில் இந்த உண்மையை கொண்டு வந்தார். இதேபோன்ற பாணியில், புதிய ஏற்பாடு இந்த போதனையை இராஜ்ஜியத்தின் தொடர்ச்சிக்கு பொருத்துகிறது, ஏனெனில் இது ஒவ்வொரு விசுவாசியும் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய யுத்தத்தை விவரிக்கிறது. எபேசியர் 6:11-12 இல் பவுல் இந்த விஷயத்தை வைத்த விதத்தைப் பாருங்கள்:

> நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படிதேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:11-12).

இந்த பகுதியும் மற்ற புதிய ஏற்பாட்டுப் பகுதிகளும் இன்றைய கிறிஸ்தவர்கள் தீமைக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை தெளிவாகப் போதிக்கின்றன. துரதிர்ஷ்டவசமாக, மோசேயைப் பின்பற்றிய இஸ்ரவேலர்கள் கானானைக் கைப்பற்றுவதைத் தவிர்த்ததைப் போல, இன்று பல கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் இந்தப் பரிமாணத்தை ஏற்றுக்கொள்ள தவறிவிட்டனர். ஆனால் புதிய ஏற்பாட்டின் இந்த கண்ணோட்டம் தெளிவாக உள்ளது. இந்த ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் இணைய வேண்டும். எபேசியர் 6:13 இல் பவுல் சொல்வது போல:

> ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 6:13).

நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொண்டால், நமது ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றி பெறுவோம்.

எனவே புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தின் மூலம் நிகழ்ந்த நமது விடுதலையை ஜலப்பிரளயத்திலிருந்து நோவா கொண்டுவந்த விடுதலையுடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இணைக்கிறது, அது போல, பூர்வ கால உலகம் போருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது போல், கிறிஸ்தவ ஞானஸ்நானமானது நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் ஆவிக்குரிய போரில் ஈடுபட நம்மை ஒப்புக்கொடுக்கிறது என்று அது கற்பிக்கிறது.

## ராஜ்யத்தின் நிறைவு

புதிய ஏற்பாடானது ஆரம்பகால வரலாற்றின் கடைசி அதிகாரங்களை ராஜ்ஜியத்தின் துவக்கம் மற்றும் தொடர்ச்சியின் பயன்பாட்டின் வெளிச்சத்தில், நோவா காலத்து ஜலப்பிரளயம் மற்றும் புதிய ஆதிகால ஒழுங்கின் யுத்தத்தின் அடிப்படையில் ராஜ்யத்தின் நிறைவு விவரிக்கப்பட்டுள்ளதைக் கண்டறிவதில் ஆச்சரியமில்லை.

### இறுதிப் பேரழிவு

கிறிஸ்து மீண்டும் மகிமையில் வருவதை இறுதிப் பேரழிவாகவும் இறுதிப் போராகவும் சித்தரிப்பதன் மூலம் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இந்த இணைப்புகளை உருவாக்கினர். 2 பேதுரு 3 இல் கிறிஸ்து மகிமையில் திரும்புவதற்கும் நோவாவின் ஆரம்பகால ஜலப்பிரளயத்திற்கும் இடையே வெளிப்படையான தொடர்பை காண்கிறோம். 3-6 வசனங்களில் பேதுரு தனது விவாதத்தைத் தொடங்கிய விதத்தைக் கவனியுங்கள்.

> முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுயஇச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள் (2 பேதுரு 3:3-6).

இந்த வேத பகுதியில், இயேசு திரும்பி வரமாட்டார் என்பதற்கு ஆதாரமாக இயற்கையின் ஒழுங்கின் சீரான தன்மையை சுட்டிக்காட்டிய பரியாசக்காரர்களை பேதுரு சரிப்படுத்தினார். சிருஷ்டிக்கப்பட்ட காலத்திலிருந்தே, எல்லாமே ஒரே மாதிரியாக இருந்தன என்று அவர்கள் நம்பினர். ஆரம்பத்தில் தேவன் உருவாக்கிய விதத்திலிருந்து எதுவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உலகத்தை சீர்குலைக்கவில்லை. எதுவும் மாறாததால், எதுவும் இனியும் மாறாது என்று அவர்கள் நம்பினர்.

ஆனால் நோவாவின் ஜலப்பிரளயத்தைப் பற்றிய மோசேயின் பதிவை வேறுவிதமாக நிரூபிக்கும்படி பேதுரு முறையிட்டார். தேவன் ஜலத்தை ஆரம்பத்தில் சிருஷ்டித்தார், ஆனால் நோவாவின் நாட்களில், உலகம் ஜலத்தால் அழிக்கப்பட்டது. உலக வரலாற்றில் ஒரு பெரிய பேரழிவு ஏற்பட்டது. நோவாவின் நாட்களில் தேவன் தலையிட்டு உலகை அழித்தார். ஆனால் 2 பேதுரு 3:7 இல் பேதுருவின் முடிவைக் கவனியுங்கள்:

> இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 3:7).

எளிமையாகச் சொன்னால், ஜலத்தின் மூலம் பூர்வ உலகம் முடிவுக்கு வந்ததைப் போலவே, தற்போதைய வானங்களும் பூமியும் கிறிஸ்துவின் தீர்ப்பில் முடிவுக்கு வரும் என்று பேதுரு வாதிட்டார். நிச்சயமாக, இந்த முறை, தீர்ப்பு நெருப்பால் வரும், ஆனால் நீரால் அல்ல, ஆனால் தேவன் உலகில் பாவத்திற்கு எதிராக இறுதி நேரத்தில் செயல்பட முடிவு செய்யும் போது, முற்காலத்தில் நிகழ்ந்த ஜலப்பிரளயத்தைப் போல அது ஒரு பெரிய அண்ட அழிவின் மூலம் நடக்கும் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

இந்த வழியில், புதிய ஏற்பாடு, நோவா காலத்தில் நிகழ்ந்த ஜலப்பிரளயத்தின் அடிப்படையில் கிறிஸ்துவின் வருகையை பார்க்க நமக்கு கற்றுக்கொடுக்கிறது. நோவாவின் நாட்களில், ஒரு பெரிய அண்ட எழுச்சியால் தீயவர்கள் பூமியிலிருந்து நியாயத்தீர்ப்பளிக்கப்பட்டு அகற்றப்பட்டனர். இன்னும் பெரிதாக, கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது, நமக்குத் தெரிந்தபடி உலகை முற்றிலும் சீர்குலைக்கும் ஒரு பேரழிவு ஏற்படும். பொல்லாதவர்கள் பூமியிலிருந்து அகற்றப்படுவார்கள், கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவரும் ஒரு பெரியதும் நித்தியமுமான புதிய வானம் மற்றும் பூமியை சுதந்தரிப்பார்கள்.

## கடைசி யுத்தம்

எவ்வாறாயினும், நாம் பார்த்தபடி, பழங்கால வரலாற்றில் நோவா காலத்தில் ஜலப்பிரளயம் நிகழ்ந்த போது தேவ ஜனங்களுக்கும் தேவனின் எதிரிகளுக்கும் இடையே மோதல்களும் போர்களும் இருந்தன. இந்த தொடர்பிற்கு ஏற்ப, புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் வருகையை கடைசி பிரபஞ்சப் போராகவும் விவரிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16 இல் கிறிஸ்துவின் வருகையை அப்போஸ்தலனாகிய யோவான் விவரித்த விதத்தைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர். அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. "இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்." அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம், அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16).

கடைசி கால கண்ணோட்டத்தின் அற்புதமான மொழியில், கிறிஸ்துவின் வருகை உலகளாவிய போராக இருக்கும் என்று யோவான் அறிவித்தார், அதில் கிறிஸ்து தோன்றி தனது எதிரிகள் அனைவரையும் அழிப்பார். இரட்சிப்புக்காக கிறிஸ்துவை விசுவாசித்தவர்களுக்கு நித்திய வெற்றியின் மகிமை வரும், ஆனால் அவரை நிராகரித்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பும் அழிவும் வரும்.

எனவே புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவை தீமைக்கு எதிரான தேவனுடைய வெற்றியின் இறுதி அனுபவமாக முன்வைப்பதை நாம் காண்கிறோம். எல்லா எதிரிகளுக்கும் எதிராக தேவன் தனது ராஜ்யத்தை நிறுவுவதில் உறுதியாக இருக்கிறார். கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது, இந்த தெய்வீக நோக்கம் முழுமையாக உணரப்படும். பொல்லாதவர்கள் அழிக்கப்படுவார்கள் மற்றும் கிறிஸ்துவில் உள்ள தேவ ஜனங்கள் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நித்திய வெற்றியையும் அமைதியையும் அனுபவிப்பார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

இந்த பாடத்தில் நாம் ஆதியாகமம் 6:9–11:9 யைப் பார்த்தோம். வேதத்தின் இந்தப் பகுதியில், இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி வழிநடத்தும்போது மோசே அவர்களுக்கு சரியான திசையை காட்டினார். இந்த அதிகாரங்களின் இலக்கிய அமைப்பையும், கானான் வெற்றியை நோக்கி நம்பிக்கையுடன் முன்னேற இஸ்ரவேலை ஊக்குவிக்க மோசே அவற்றை எவ்வாறு வடிவமைத்தார் என்பதையும் நாம் பார்த்தோம். மேலும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று நிலைகளுக்கு இந்த கருப்பொருள்கள் எவ்வாறு பொருந்தும் என்பதையும் பார்த்தோம்.

இந்த வீழ்ச்சியடைந்த உலகில் கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கான போராட்டங்களையும் சவால்களையும் நாம் எதிர்கொள்ளும்போது, மோசே இஸ்ரவேல் மக்களுக்கு நீண்ட காலத்திற்கு முன்பு கொடுத்த செய்தியை நாம் மனதில் கொள்ள வேண்டும். தேவன் நோவா மூலம் ஆதி உலகத்தை விடுவித்ததைப் போலவே, பாவத்தின் கொடுமையிலிருந்து நம்மை விடுவித்தார். ஆனால், கிறிஸ்து தனது மக்களுக்கு இறுதி வெற்றியைத் தரும் நாளுக்காகக் காத்திருக்கும்போது, பிரச்சனை மற்றும் போராட்டம் நிறைந்த பாதையில் அவர் நம்மை வைத்துள்ளார். அந்த நேரம் வரை, நாம் வாழும் உலகம் இன்னும் சரியாகவில்லை என்பதை நாம் அறிவோம், ஆனால் உலகத்துக்கான ஆவிக்குரிய போரில் கிறிஸ்துவைப் பின்தொடர்வது சரியான திசையில் செல்கிறது என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.